## சுருக்கம்

உயர்கல்வி-கல்லூரிக் கல்வித்துறை 2007-2008 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித்துறை மானியகோரிக்கை மீதான அறிவிப்பு – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திதர "பணியமர்த்தல் மையம்"(Placement Centre) – அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வி (ஜி1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 17** **நாள்: 28.1.2008**

**படிக்கப்பட்டவை:**

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்.21084 /Q1/ 2007, நாள் 8.6.2007 மற்றும் 9.10.2007.

-----

**ஆணை:**

2007-2008ஆம் ஆண்டிற்கான உயர்கல்விதுறை மான்யக்கோரிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்த போது மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை செய்துள்ளார்கள்:-

> "உயர்கல்வியின்முக்கியமான நோக்கங்களில் ஒன்று கல்லூரியில் பயிலும் மாணர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவது. அரசு கல்லூரிகள் அல்லாத பிற கல்லூரிகளில், மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித்தருவதற்கு பணியமர்த்தல் மையம் (Placement Centre) ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாக பல்வேறு தொழில் நிறுவனங்களை அணுகி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத் தருகிறார்கள். ஆனால் அரசு கல்லூரிகளில் அதேபோன்ற பணியமர்த்தல் மையம் இல்லாத நிலைமையுள்ளது. அதனை கருத்தில் கொண்டு பணியமர்த்தல் மையம் அனைத்து பொறியியல், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தொழில் நிறுவனங்களை அணுகி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு கல்லூரிகளில் பணியமர்த்தல் மையம் அமைப்பது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது:-

i) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறும்பொருட்டு, கல்லூரிகல்வி இயக்ககத்தில் மாநில பணியமர்த்தல் மையம் ஒன்று அமைக்கலாம்.

ii) கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் அமைக்கப்படும் பணியமர்த்தல் மையம், பல்வேறு பணியமர்த்தும் நிறுவனங்களை தொடர்பு கொண்டு அந்நிறுவனங்களிலிருந்து சாதகமாக பெறப்படும் தகவல்களை கல்லூரிகளிலுள்ள மாணவர் பணியமர்த்தல் பிரிவிற்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பலாம். கல்லூரிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலை கல்லூரிக் கல்வி இயக்ககத்திலுள்ள பணியமர்த்தல் மையம் பெற்று, ஒற்றை சாளர முறையில் பணியாளர்கள் தேவைப்படும் நிறுவனங்களுக்கு மாணவர்களை பணியமர்த்தும் மையமாக செயல்படும்.

iii) கல்லூரி அளவில் அமைக்கப்படும் பணியமர்த்தல் மையங்கள் இறுதியாண்டு மாணவர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். இதற்கு மதிப்பூதியம் ஏதும் வழங்கமாட்டாது.

**3.** மாநில பணியமர்த்தல் மையத்தின் செயல்பாட்டிற்கென கீழ்கண்ட செலவினங்கள் அனுமதிக்கப்பட்டு, ரூ.**1,10,000/-** (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| a) | பணியமர்த்தல் மையத்தின் பொறுப்பிலுள்ள இணை இயக்குநருக்கு மதிப்பூதியம் (ரூ.**1000/-** ஒரு மாதத்திற்கு) | : ரூ. **12000/-** (ஒரு வருடத்திற்கு) |
| b) | கணினி வாங்குவதற்கு | : ரூ.**25,000/-** |
| c) | வெளியாட்கள் மூலம் பணியமர்த்தப்படும் உதவியாளர் / கணினி இயக்குபவருக்கு ஊதியம் (ரூ **5000/-** ஒரு மாதத்திற்கு) | : ரூ.**60,000/-** (ஒரு வருடத்திற்கு ) |
| d) | எழுதுபொருள்கள் மற்றும் தொலைபேசி செலவுகள் | : ரூ.**13,000/-** (ஒரு வருடத்திற்கு) |
| | மொத்தம் = | ரூ.**1,10,000/-** |

**4.** இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:

**2202** பொதுக்கல்வி **-03** பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் -001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் -I திட்டத்தில் சேராதது – AA கல்லூரிக் கல்வி இயக்ககம் -01 சம்பளங்கள் **-09** மதிப்பூதியம் - (த.தொ.கு:**2202 03 001** AA 0196) (New) Rs.12,000/- .

**2202** பொதுக்கல்வி **-03** பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் -001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I திட்டத்தில் சேராதது – AA கல்லூரிக் கல்வி இயக்ககம் **-76** கணினியும் துணைப்பாகங்களும் **- 01** வாங்குதல். (த.தொ.கு: **2202 03 001** AA **7617)** (New) Rs.25,000/-

**2202** பொதுக்கல்வி -03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் - **001** நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I திட்டத்தில் சேராதது – AA கல்லூரிக் கல்வி இயக்ககம் - **33** தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – **04** ஒப்பந்த ஊதியம். ( த.தொகு: **2202 03 001** AA **3344)** Rs. 60,000/-

2202 பொதுக்கல்வி -03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் - 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் -I திட்டத்தில் சேராதது – AA கல்லூரிக் கல்வி இயக்ககம் -05- அலுவலகச் செலவுகள் - 01 தொலைபேசிக் கட்டணங்கள்.
(து.தொகு: 2202 03 001 AA 0516) Rs.6000/-

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் - 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் -I திட்டத்தில் சேராதது – AA கல்லூரிக் கல்வி இயக்ககம் - 05 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவுகள்.
(து.தொ.கு: 2202 03 001 AA 0525) Rs.7.000/- /

5. தேவையான நிதி 2007-2008ம் ஆண்டு திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த மதிப்பீடு நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வரையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க கல்லூரிக்கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தை 2007-2008ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கும்பொருட்டு, தக்க கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு தவறாமல் அனுப்பி வைக்கும்படி கல்லூரிக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.3217/EdnI/08 நாள் 25.1.2008 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பதிவேட்டு எண்.1729 (ஆயிரத்து எழுநூற்று இருபத்து ஒன்பது)ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,சென்னை-6.
மண்டல கல்வி இணை இயக்குநர்கள்,கல்லூரிக் கல்வி இயக்குநர் (வழியாக),
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5/35.
மாநில கருவூல கணக்கு அலுவலர் சென்னை-35.
மாநில முதன்மை கணக்காயர், சென்னை-18/35.
மாண்புமிகு உயர்கல்வி துறை, அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
உயர்கல்வித்துறை (அனைத்துப்பிரிவுகள்).
நிதி (வ.செ.பொ.II)த்துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

மை